# BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## கோவிட்-19 தொற்று பரவல் காலத்தில் கறுப்பர் இன சரித்திரம் பற்றிய மாதத்தை ப்ராம்ப்ட்டன் நகரம் மெய்நிகராக கொண்டாடுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 1, 2021) – நமது நகரம், மாகாணம் மற்றும் நாட்டிற்கு, ப்ராம்ப்ட்டன் நகரின் கறுப்பர் இன சமூகம்அளித்து வருகின்ற எண்ணிலடங்கா கலாச்சார, பொருளாதார மற்றும் இரக்கம் நிறைந்த பங்களிப்புகளைக் கொண்டாடும் விதமாக கறுப்பர் இன சரித்திரத்திற்கான மாதமாக பிப்ரவரி மாதத்தினை ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகரிக்கிறது.

இவர்களில், வழக்கறிஞர்கள், சாம்பியன்கள் மற்றும் புதுமைபடைப்பாளர்கள் என , சமூகத்தில் இருக்கின்ற நபர்களை அங்கீகரிக்கும் விதமாக, *மேயர் பேட்ரிக் பிரவுன் அவர்களின் மேக்கிங் பிளாக் ஹிஸ்டரி* (*Mayor Patrick Brown's Making Black History Awards*) விருதுகளுக்கு குடியிருப்பாளர்களை பரிந்துரைக்கலாம். மேலும் தகவல்களுக்கு வருகை தரவும் www.brampton.ca/BHM2021.

கோவிட்-19 காரணமாக, இந்த ஆண்டு செயல்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் ஆன்லைனிலேயே நிகழ்த்தி வழங்கப்படும். நிகழ்ச்சி நிரலில் பின்வருவன அடங்கும்:

- சன் லைஃப் ஃபினான்ஷியல் (Sun Life Financial) அமைப்பானது உள்ளூர் கறுப்பர் இன கலைஞர்களின் வாராந்திர செயல்திறன் தொடராக நிகழ்த்தி வருகிறது; அதனை இப்போது மெய்நிகர் செயல்திறன் தொடராக வழங்குகிறது
- கறுப்பர் இன தயாரிப்பாளர்கள் சந்தை (Black Makers Market) அமைப்பு  கறுப்பர் இனத்திற்கு சொந்தமான வணிகங்களைப் பற்றி நிகழ்த்துவார்கள்
- உள்ளூர் யோகா பயிற்றுவிப்பாளர் மேத்யூ போனஸ் (Matthew Bonas) அவர்கள் ஆரோக்கியமான சமயம் பற்றி நிகழ்த்துவார்
- அசாலியா ஹார்ட் (Azalea Hart) அமைப்பானது  ப்ராம்ப்ட்டன் உணவு பயணத்தில் கறுப்பர் இனத்தவரல் செய்யப்படும் சிறந்த உணவுகள் பற்றி வழங்குவார்
- தொற்றுபரவல் காலத்தின் போது ஆக்கப்பூர்வமாக இருப்பது, உங்கள் தொழில்வாழ்க்கை பாதையை வழிநடத்துதல், கறுப்பர் இன வாழ்வும் முக்கியமே (Black Lives Matter) மற்றும் வலுவான பிளாக் தலைமை, போன்ற தலைப்புகளில் ப்ராம்ப்ட்டன் நகரின்  ஜோன்ஸ் & ஜோன்ஸ் புரொடக்ஷன்ஸ் தொகுத்து வழங்கிகின்ற குழு விவாதம் இடம் பெறும்

நிகழவிருக்கும் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு, வருகை தரவும்: www.brampton.ca/BHM2021.

**கறுப்பர் இனத்திற்கு அரசியல் அதிகாரம் அளித்தல் பற்றிய மாநாடு**

பிப்ரவரி 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் நடைபெறவிருக்கின்ற கறுப்பர் இனத்திற்கு அரசியல் அதிகாரமளித்தல் மாநாடானது, தகவல் மற்றும் ஊக்கமளிக்கும் உரையாடல்களை, கறுப்பர் இன அரசியல் தலைவர்கள் மற்றும் கூட்டாளிகளுடன் சேர்ந்து வழங்கும். இதில் நடைபெறும் உரையாடல்கள் புரையோடிப்போன இனவெறி, சமூக, கல்வி மற்றும் கார்ப்பரேட் வகைகளில் சமத்துவமின்மை ஆகியவற்றை ஒழிப்பதற்கான ஒரு வழிமுறையாக, கறுப்பர் இனத்திற்கான ஒரு அரசியல் தலைநகரை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டிருக்கும்; ஆனால் மிக முக்கியமாக, தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் இளைஞர்களை அரசியலின் அரங்கில் பங்கேற்பதை ஊக்குவிக்கும். பதிவு செய்ய இங்கு கிளிக் செய்க

**கறுப்பர் இன இளைஞர் தலைமைத்துவம் பற்றிய மாநாடு**

எங்கள் நகரத்தில் உள்ள இளைஞர்கள் வெற்றி பெறும் வகையில் தடைகளைத் தாண்டிச் செல்வதற்கு சிக்கலான சவால்கள் உள்ளன, வெற்றி பெறுவதற்கு இனிமேல்தான் அதிக வேலைகள் உள்ளன. பிப்ரவரி 26 அன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 3:30 மணி வரை நடைபெறவிருக்கின்ற இந்த நிகழ்வானது, இளைஞர்களுக்கு அவர்களின் சவால்கள், கவலைகள் மற்றும் கனவுகளை விவாதிக்கவும் மற்றும் பகிர்ந்து கொள்வதற்கானள ஒரு தளத்தை வழங்குவதற்கான வாய்ப்பும் ஆகும். அவர்களின் சில சவால்களுக்கான தீர்வுகளைக் காண்பதில் கவனம் செலுத்துவதோடு, அவர்களின் வெற்றியை ஆதரிப்பதற்கான வழிகளைக் கண்டறியவும் உதவுகின்ற உரையாடலில் இந்த மாநாடு ஈடுபடும். பேசுவதற்கான ஒரு தளத்தை இளைஞர்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல், தொழில்வல்லுனர்கள் மற்றும் ஊக்கமளித்து பேசுகின்ற பேச்சாளர்களிடமிருந்தும் இந்த மாநாடு உற்றுக் கேட்கும். இந்த மாநாட்டின் செய்தி இளைஞர்களுக்கும் பள்ளி வாரியங்களுக்கும் சென்றடைகிறது. பங்கேற்பது பற்றிய மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: economicantiblackracism@brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

"இன்று கலாச்சார ரீதியாக பரவலாக இருக்கின்ற, இரக்கம் காட்டக்கூடிய வகையிலான மற்றும் வளமான தேசமாக இந்த நாட்டை மாற்ற, ப்ராம்ப்ட்டனின் கறுப்பர் இன சமூகம் எவ்வளவோ செய்துள்ளது. இப்படியான கறுப்பர் இன வரலாற்றைக் கூறும் மாதத்தை ஒப்புக் கொண்டு, அதன்பேரில் கொண்டாடும் நிகழ்வுகளின் ஒரு மாத கால நிகழ்ச்சிகளை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம். திட்டமிடப்பட்ட முக்கியமான உரையாடல்கள் மற்றும் செயல்பாடுகளில் பங்கேற்பதன் மூலம், நமது சமூகத்தில் கறுப்பர் இன சமூக உறுப்பினர்களின் முக்கிய பங்களிப்புகளை முன்னிலைப்படுத்தவும், மேலும் அனைவரையும் உள் சேர்த்தபடியான ஒரு நகரத்தை உருவாக்குவதற்கும் நாங்கள் பணியாற்றுகிறோம். "

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரின் துடிப்பான கலாச்சாரக் கலவை மற்றும் நமது உள்ளூர் பொருளாதாரத்திற்கு எங்கள் நகரம் முழுவதும் உள்ள ஆப்பிரிக்க மற்றும் கரீபிய கறுப்பர் இன சமூகங்கள் பெருத்த பங்களிக்கின்றன. ப்ராம்ப்ட்டன் நகர சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கறுப்பின பெண் என்ற முறையில், கறுப்பர் இன வரலாற்றுக்கான மாதத்தை அர்த்தமுள்ள வழிகளில் ஒப்புக்கொள்வதற்கான வழியை வழிநடத்துவதில்

நகரசபையின் சக உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுடன் சேர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன். அடுத்த தலைமுறை சமூகத் தலைவர்களுக்கு வழிவகுக்கின்ற வகையில், ப்ராம்ப்ட்டனின் கடந்த காலத்திலும் மற்றும் நிகழ்காலத்திலும் சமூக உறுப்பினர்கள் ஆற்றிய பல பங்களிப்புகளை நாங்கள் ஒன்றாக அங்கீகரிக்கிறோம். ”

– *சார்மெய்ன் வில்லியம்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 7 & 8, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்டன் நகரம் ஒரு பல கலவை நகரம், மற்றும் கறுப்பர் இனம் பற்றிய வரலாற்றுக்கான மாதத்தை ஒப்புக்கொண்டு கொண்டாடுவதன் மூலம் நகரத்தின் பன்முகத்தன்மையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். கறுப்பர் இன சரித்திரம் என்பது உலக சரித்திரம் ஆகும். சாதனை படைத்தல், புதுமை படைத்தல், கலாச்சாரம் மற்றும் மனிதநேயத்தில் வேரூன்றிய சக்திவாய்ந்த மற்றும் செறிவான சரித்திரத்தை இது கொண்டிருக்கிறது. நம் முன் தோன்றிய கதைகள், நமக்கு முன் வந்தவர்களின் மரபுகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கவும், ஈர்க்கவும் நாம் இந்த மாதம், நேரம் ஒதுக்கிக் கொள்கிறோம் - இன்னும் கூடுதலான ஒற்றுமை, மரியாதை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான உணர்வை இது வழங்கும் என்றும் சமத்துவமான, நியாயமான, மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நாட்டை கட்டமைக்க உதவும் எனவும் நம்பி இதைச் செய்கிறோம்.”

– *கின்னெத் ச்சாப்மன், பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பின் முதுநிலை ஆலோசகர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த ஆண்டின் கறுப்பர் இன சரித்திரத்திற்கான மாதம் பற்றிய நிகழ்வுகள் ப்ராம்ப்ட்டன் நகர கறுப்பர் இன சமூகத்தை பெருமையுடன் அங்கீகரித்து கொண்டாடுகிறது; இது நமது நகரத்தின் கலாச்சாரக் கலவைக்கு அவர்கள் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பை அங்கீகரிக்கிறது. மாதம் முழுவதும் நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ள மெய்நிகர் நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள், நகரம் முழுவதும் உள்ள பல்வேறு குழுக்கள் ஒன்றுடன் ஒன்று ஈடுபாடு கொள்ளவும், கலாச்சார நிகழ்வுகளை ஆதரிக்கவும், நமது துடிப்பான கறுப்பர் இன சமூகத்தைப் பற்றி மேலும் அறியவும் இது ஒரு வாய்ப்பாகும். மாதம் முழுவதும் நிகழ்த்தத் திட்டமிடப்பட்டுள்ள பரந்த அளவிலான நிகழ்வுகளில் பங்கேற்க அனைவரையும் அழைக்கிறோம். ”

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

BRAMPTON

**Media Release**

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca